**வடமேல் மாகாண சபையின் 2016**

-------------------------------------------------------------

வடமேல் மாகாண சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ்,கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது. இதில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பான விரிவானதோர் அறிக்கை மாகாண சபையில் முன்வைக்கப்படுவதற்காகக் காலக் கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப தயாரிக்கப்படுதலும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதுமானளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தொகைகளுக்கும் வெளிப்படுத்தல்களுக்கும் உபயோகப்படும் கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வடமேல் மாகாண சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 மாகாண சபை நிதியம்**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையினது நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

(அ) வருமானக் கணக்கு

மாகாண நிதிசார் விதிகளின் பிரகாரம், வருமானம் தொடர்பாக நியதிச் சட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கணக்களி உத்தியோகத்தர்களால் தமக்குரிய வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் வருமானக் குறியீடுகளுக்கு உரிய 26 கணக்குகளும் 2017 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஒதுக்கீட்டு கணக்கு அடங்கலாக ஏனைய கணக்குகள்

2017 யூலை 25 இல் உள்ளவாறு மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான ஏனைய கணக்குகள் சமர்ப்பிக்கப்படுவதிலான முன்னேற்றம் பின்வருமாறு.

| | | **2016 ஆம் ஆண்டிற்கானது** | | |
|---|---|---|---|---|
| | **கணக்கின் பெயர்** | **மொத்தக் கணக்குகளது எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை** |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்கு | 28 | 28 | - |
| (ii) | மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு | 78 | 78 | - |
| (iii) | மாகாண சபை அங்கத்தவர்களுக்கான கடன் வசதி முற்பணக் கணக்கு | 01 | 01 | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்கு | 07 | 05 | 02 |
| (v) | நிதிய மற்றும் சட்டவாக்க கணக்கு | 14 | 14 | - |
| (vi) | வருமானக் கணக்கு | 26 | 26 | - |
| | **மொத்தம்** | **154** | **152** | **02** |

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் 2013 ஒக்டோபர் 02 ஆந் திகதிய 2013/03 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச்

சுற்றறிக்கையின் பிரகாரம், அரச துறையை சேர்ந்த நிறுவனங்களது கணக்கீடு காசு அடிப்படையில் அல்லது சேர்ந்து நின்ற அடிப்படையில் அமைய வேண்டுமாயினும்,வடமேல் மாகாண சபை அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மூலதனச் சொத்துச் சுவீகரிப்பிற்காக ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 4,685,181,532 மற்றும் முன்னைய ஆண்டுகளில் மூலதனச் சொத்து சுவீகரிப்பதற்கு ஏற்பட்ட செலவினம் என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிக்கொணரப்படாததுடன், நிலையான சொத்துக்களைக் கணக்கிலிடுவதற்கு கடைப்பிடிக்கப்பட்ட நிறுவனத்தின் கொள்கைகள் வெளிக்கொணரப்படவில்லை.

## 2.2.4. கணக்கீட்டு குறைபாடுகள்

அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கென கடனாக நிதி நிலமைக் கூற்றில் ரூபா 139,956,198 மீதியாகக் காட்டப்பட்டிருந்தபோதும், அம்மீதியானது வணிக முற்பணக் கணக்குகளின் பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளை ஒன்றுடனொன்று ஈடுசெய்ததன் பின்னர் ஏற்பட்ட பெறுமதியேயாகும் என்பதால் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

## 2.2.5. நிதியேற்பாட்டு முகாமைத்துவம்

(அ) 260-03-04-2104 செலவின விடயத்திற்கான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட ரூபா 8,469,330,000 நிதியேற்பாட்டில் ரூபா 30,000,000 மாகாண நிதிசார் விதிகள் 30,32 என்பவற்றின் மூலம் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 260-03-04-2103 மற்றும் 260-03-04-2104 ஆகிய செலவின விடயங்களுக்கான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 325,000,000 ஆகும். இதற்கு மேலதிகமாக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 8,669,330,000 பெறப்பட்டு அதில் 80 சதவீதமான ரூபா 6,846,034,970 சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டினது வருடாந்த நிதிக் கூற்றின் மூலம் 07 அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் தலைப்புகளில் 15 சந்தர்ப்பங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாடாகிய ரூபா 36,534,018 முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தது. அத்துடன், 16 தலைப்புகளில்

மொத்த நிதியேற்பாட்டுத் தொகையாக ரூபா 12,802,244,547 இருந்தபோதும் 75 சந்தர்ப்பங்களில் அதில் ரூபா 9,182,081,112 சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், 25 சந்தர்ப்பங்களில் 10 தலைப்புகளில் ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியாகிய ரூபா 73,063,350 மாகாண நிதிசார் விதிகள் 30, 32 என்பவற்றின் மூலம் வேறு செலவினங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டினது வருடாந்த நிதிக்கூற்றின் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாத 05 செலவினத் தலைப்புகளில் 11 சந்தர்ப்பங்களில் ரூபா 76,751,939 கூட்டுத் தொகை நிதியேற்பாடுடன் புதிய செலவின விடயங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 2 செலவினத் தலைப்புகளின் 03 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 68 முதல் 100 சதவீதத்திற்குச் சமமான ரூபா 11,079,726 சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டின்போது கமத்தொழில், காணி, நீர்ப்பாசன, கடற்றொழில், விலங்கின உற்பத்தி, சுகாதார மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு என்பவற்றினது வாகனப் பராமரிப்பிற்கு ரூபா 3,500,000 செலவினமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 நவம்பர் 07 ஆந் திகதியளவில் செலவழிக்கப்பட்டிருந்தது ரூபா 4,671,280 ஆகையால் நிதியேற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 1,171,280 செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) திறைசேரிச் செயலாளரின் 2015 டிசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 1202 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியின் 15 சதவீதத்திற்குச் சமமான தொகை முடக்கிவைக்கப்பட வேண்டுமாயினும், தலைமைச் செயலகம், 02 அமைச்சுக்கள், 05 திணைக்களங்கள் என்பவற்றில் முடக்கி வைக்கப்பட வேண்டிய தொகை ரூபா 6,477,000 ஆகவிருந்தும் ரூபா 1,372,167 அல்லது 32 சதவீதமே முடக்கி வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.6. பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) தலைமை அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முற்பண நடவடிக்கையாக விஸ்கம் மனையைப் பராமரிப்பதற்கு வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 7,038,211 ஆகும். இது மீளாய்வாண்டு முடிவளவிலும் தீர்த்துவைக்கப்படாதிருந்தது.

(ii) குளியாப்பிட்டிய கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 05 பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் பெற வேண்டிய ரூபா 15,481,059 மீளாய்வாண்டு முடிவளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் பொருட்டு 12 மாதெல்பாடு உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 364,000, 167 உப்பளங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,680,128 மற்றும் இறால் செயற்திட்டம் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 180,000 குத்தகைப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை கல்பிட்டிய பிரதேச செயலகம் மேற்கொள்ளவில்லை.

(iv) மாகாண அமைச்சுக்கள் 04, 13 திணைக்களங்கள், 05 பிரதேச செயலகங்கள், 07 வலயக் கல்வி அலுவலகங்கள், தலைமைச் செயலகம் என்பவற்றிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த, சேவை நீங்கிய, வேலை இடை நிறுத்தங்களுக்குள்ளாகிய, ஓய்வு பெற்ற மற்றும் ஏனைய காரணங்களினால் தீர்த்துவைக்கப்படாதிருந்த கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 235,996,319 ஆகும்.

(ஆ) கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------

தலைமைச் செயலகம்,கமத்தொழில் அமைச்சு, 07 வலயக்கல்வி அலுவலகங்கள், 05 திணைக்களங்கள் என்பவற்றிற்கு இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களது கடன் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 44,843,317 ஆகும். இவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கட்டு நிதிக் கணக்கு

----------------------------------

மூன்று நிறுவனங்களது தீர்த்து வைக்கப்படாத கட்டு நிதிக் கணக்கு மீதி ரூபா 48,321,857 ஆகும்.

(ஈ) பொதுவைப்புகள்

---------------------------------

(i) நெடுங்காலக் குத்தகைக்குப் பெறப்பட்ட காணி ஒன்றை உரித்தாக்கிக் கொள்வதற்கான உரித்துறுதியைப் பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட தம்மென்னாகாமன்ட் நிறுவனம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் வைப்பிலிட்ட ரூபா 300,000 ஆனமடுவ பிரதேச செயலகப் பொதுவைப்புக் கணக்கில் 2011 செப்தெம்பர் 21 ஆந் திகதி செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்தொகையை மேற்படி நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டியிருந்த நெடுங்காலக் குத்தகையில் ஈடு செய்வதற்கான அங்கீகாரம் 2016 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்தபோதும், 2017 மார்ச் மாதமளவிலும் அது வைப்புக் கணக்கிலேயே இருந்தது.

(ii) மாகாண புடைவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு கணனி மென் அணி முறைமை ஒன்றை தயாரிப்பதற்குப் பெறப்பட்ட நிதியேற்பாடு ரூபா 480,000 ஆகும். அதில் ரூபா 240,000 வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2011 ஆம் ஆண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 240,000 பயன்படுத்தப்படுவதன் மூலம் குறித்த பணியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காது 2017 மே 16 ஆந் திகதியளவில் அது பொதுவைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(iii) தேசிய புடவைக் கைத்தொழில் கண் காட்சிக்காக 2013 ஆம் ஆண்டின்போது மத்திய அரசாங்க அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 198,500 மூலம் குறித்த பணி நிறைவேற்றப்பட்டபோதும், 2017 மே மாதமளவிலும் அத்தொகை வடமேல் மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கிலிருந்தது.

(iv) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு தலைமைச் செயலகம், 05 திணைக்களங்கள், 02 பிரதேச பொறியியலாளர் அலுவலகங்கள், 06 பிரதேச செயலகங்கள் என்பவற்றிலிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்பாகிய ரூபா 6,574,364 சம்பந்தமாக 571 ஆம் நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(v) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் வைப்புக் கணக்கில் காணப்படும் வீதிப் பயணிகள் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் கமநலசேவைகள் திணைக்களம் என்பவற்றுக்குத் தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ள ரூபா 426,404 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.7. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | |
| (i) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் உப பிரிவு | கல்வி அமைச்சு 2016 ஆம் ஆண்டில் செய்து கொண்ட 246,609,662 கூட்டுத் தொகையுடைய 11 ஒப்பந்த உடன்படிக்கைகளது கேள்விதாரர்கள் பதிவு செய்யப்படாதவர்கள் ஆவர். |
| (ii) 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கக் கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு | கூட்டுறவுத் திணைக்களம் மீளாய்வாண்டில் ரூபா 25,237,500 கூட்டுத் தொகையை நிதி ஆலோசனைத் தொழிற்படு குழுவின் அங்கீகாரமின்றி முதலீடு செய்திருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) அத்தியாயம் XIV பிரிவுகள் 8.1 மற்றும் 8.1.2 | MN 5 சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா 16,720 ஆரம்ப சம்பளத்திற்கு உரித்துடைய உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமையக சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் போக்குவரத்துக்கான மைல்தூர வாடகையைப் பெற அருகதையில்லாதபோதும், 2013 சனவரி முதல் 2016 டிசெம்பர் வரை மைல் |

தூரத்திற்கான வாடகையாக மாதாந்தம் ரூபா 7,680 வீதம் கூட்டுத்தொகையாக ரூபா 368,640 வழங்கப்பட்டிருந்தது.

(ii) அத்தியாயம் XXIV பிரிவு 4.2.3

மீளாய்வாண்டின்போது 02 திணைக்களங்களினதும் 02 வலயக் கல்வி அலுவலகங்களினதும் இடர் கடனாக ரூபா 43,292,301 கூட்டுத் தொகை வழங்கப்பட்டபோதும், தமது ஓய்வூதியப் பணிக்கொடையில் அச்சமயத்தில் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்த கடன் மீதியை அறவிடுவதற்கான இரத்துச் செய்யப்பட முடியாத விருப்புக் கூற்று அவர்களிடமிருந்து பெறப்படவில்லை.

(இ) வடமேல் மாகாண நிதிசார் விதிக்கோவை (மா.நி.வி)

------------------------------------------

(i) மா.நி.வி 180.2

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் குறித்த பொருட்களைப் பெறாது 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,408,823 பெறுமதியான காசோலைகளை வழங்குனர் பொருட்டு வரைந்திருந்தது.

(ii) மா.நி.வி 262.2.2

- நிக்கவரட்டிய வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் 18 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 1,011,150 முற்பணம் மீளாய்வாண்டு முடிவளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

- நிக்கவரட்டிய வலயக் கல்வி அலுவலகம் 10 சந்தர்ப்பங்களில் ஏற்கனவே பணி நிமித்தக் கட்டு நிதியைப் பெற்று அதனைத் தீர்த்து வைக்காதிருந்த

உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் பணி நிமித்தக் கட்டு நிதியாக வழங்கிய தொகை ரூபா 884,500 ஆகும்.

- ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் முற்பணம் ரூபா 100,000 க்கு மேற்படலாகாது. எவ்வாறாயினும், அதற்கு ஒவ்வாதவாறு வடமேல் மாகாண கல்வி அமைச்சினால் XIII ஆம் தேசிய விளையாட்டு விழா நடவடிக்கைகளுக்காக ரூபா 400,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (iii) | மா.நி.வி. 476 | மூன்று மாகாண திணைக்களங்கள், மாகாண கல்வித் திணைக்களத்துக்குரிய 821 பாடசாலைகள், 35 மாகாண அலுவலகங்கள் 98 சுகாதாரத் திணைக்கள நிலையங்கள் என்பவற்றினது மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2017 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் நடைபெறாதிருந்தது. |

(ஈ) அரச நிதிச் சுற்றறிக்கை

-----------------------------------------

| | |
|---|---|
| 2015 மார்ச் 10 ஆந் திகதிய 03/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | குளியாப்பிட்டிய அடிப்படை மருத்துவ மனையில் ஊடகப் படியைச் செலுத்துகையில் 2015 செப்தெம்பர் முதல் 2016 செப்தெம்பர் வரை ஆரம்ப தர மருத்துவ உத்தியேகத்தர்களுக்கு ரூபா 757,700 மற்றும் II ஆம் தர மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,267,500 என அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்கு அதிகமாக ரூபா 2,025,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

**2.2.8 போதிய அதிகாரத்தால் உறுதி செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜீவ மருத்துவ பொறியியலாளரது சிபார்சின்றி மீளாய்வாண்டில் 38 சந்தர்ப்பங்களில் ரூபா 134,619,582 பெறுமதியான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது சிபார்சு பெறப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் பொது வைப்புக் கணக்கிலிருந்த ரூபா 1,082,228 மீதியைப் பயன்படுத்தி குறித்த வைப்புகளுக்குரிய பணிகளுக்கு அப்பாற்பட்டவற்றிற்கு செலவுகளை மேற்கொண்டிருந்தது.

(இ) நிக்கவரட்டிய அடிப்படை மருத்துவ மனைக்குத் தொழில்நுட்ப குழுவின் சிபார்சு இல்லாது 2016 டிசெம்பரில் ரூபா 1,803,550 பெறுமதியான வர்ணம் பூசுவதற்கான மை அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஆனமடுவை பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 1.463 ஹெக்டெயர் காணி மற்றும் அதற்கருகே அமைந்துள்ள 4.047 ஹெக்டெயர் அரச காணி என்பவற்றைச் சட்டபூர்வமாகச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாது, ஆனமடுவை பிரதேச செயலாளரின் தற்றுணிபின் பேரில் வீடமைப்புத்திட்டம் ஒன்றிற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் வேலை கையளிக்கப்பட்டிருந்தது.

(உ) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் மற்றும் காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம், காணி அற்றோரிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அதன் பொருட்டு எதிர்ப்புகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பரிசீலித்து தகுதியுடையோரது பெயர்ப் பட்டியலை மாகாண காணி ஆணையாளரது அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். எனினும், ஆனமடுவைப் பிரதேச செயலாளர் 20 நபர்களது பெயர்ப்பட்டியலை மாத்திரமே அனுப்பி மாகாண காணி ஆணையாளரிடமிருந்து பெற்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் புத்தளம் மாவட்டத்தில் வசிப்பதை உறுதி செய்வதற்கான எதுவித சான்றுகளுமற்ற 13 நபர்களுக்கு ஒரு நபருக்கு 2 ஏக்கர் காணி வீதம் முறையற்றவாறு வழங்கியிருந்ததுடன், அந்த அனுமதிப்பத்திரங்களிலும்

விண்ணப்பங்களிலும் காணப்பட்ட கையெழுத்துகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தன.

(ஊ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் 2.14.1 ஆம் பந்தியின் பிரகாரம், பிரதேச பொருட் கொள்வனவுத் தீர்மானத்தின் அடிப்படையில் அதி கூடிய ரூபா 2,000,000 பெறுமதிக்கே உடன்படிக்கையில் ஈடுபடலாமெனினும், அவ்வரம்பினை மீறி வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வாரியப்பொல நிறைவேற்று பொறியியலாளர் 07 சந்தர்ப்பங்களில் ரூபா 21,796,720 கூட்டுத் தொகையுடைய வீதிப் பராமரிப்பிற்கான மூலப் பொருட்களையும் இயந்திர சாதனங்களையும் வழங்குதற் பொருட்டு ஒப்பந்தகாரர்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

## 03. வருமான முகாமைத்துவம்

மாகாண சபையின் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் ஒவ்வொரு வருமானக் குறியீட்டின் கீழும் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் பின்வருமாறாகும்.

| வருமானக் குறியீட்டின் இலக்கம் | வருமான விபரம் | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா.மில் | உள்ளவாறான வருமானம் ரூபா.மில் | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா.மில் | உள்ளவாறான வருமானம் ரூபா.மில் |
| 10.02, 10.03 | உற்பத்தி மற்றும் செலவினம் மீதான வரி | 6,653.00 | 6,555.69 | 5,450.00 | 5,658.70 |
| 20.02 | குத்தகை வாடகை, வட்டி, இலாபம், பங்கிலாபம் என்பன | 298.00 | 211.46 | 243.00 | 187.16 |
| 20..03 | விற்பனையும் கட்டணமும் | 540.00 | 613.06 | 472.00 | 536.64 |
| 20.06 | மூலதனச் சொத்து விற்பனை | 25.00 | 2.32 | 10.00 | 0.23 |
| | **மொத்தம்** | **7,516.00** | **7,382.53** | **6,175.00** | **6,382.73** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நிதிசார் விதி 41.1.4 ஆம் பிரிவின் பிரகாரம், சாத்தியமானதும் பிழையற்றதுமான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு கணக்காளி உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமையால் 13 வருமானக் குறியீடுகளது மதிப்பிடப்பட்ட வருமானத்தை எய்த முடியவில்லை. அது 13 முதல் 95 சதவீதமாக ரூபா 8,987,072 முதல் ரூபா 11,358,846 வரையில் அமைந்திருந்தது. 12 வருமானக் குறியீடுகளுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட உள்ளவாறான வருமானம் 09 முதல் 54 சதவீதமாக ரூபா 182,456,925 முதல் ரூபா 1,073,281 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) வருமான நிலுவை தொடர்பாக மீளாய்வாண்டினதும் முன்னைய 2 ஆண்டுகளினதும் விபரம் பின்வருமாறு

| வருமானத் தோற்றுவாய் | ஆண்டு<br>2016 | <br>2015 | <br>2014 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சொத்தை ஒப்படைத்தல் மீதான மேலதிக முத்திரைத் தீர்வை | 32,290,394 | 5,012,980 | 7,195,967 |
| விற்பனைப் புரள்வு வரி | 93,946,012 | - | - |
| காணி மற்றும் ஏனைய குத்தகை வாடகை | 11,556,829 | 6,372,026 | 3,932,922 |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்ட காணிகளுக்கான கட்டணம் | 560 | 127,190 | 402 |

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ஆகிய முறையே ரூபா 391,931,086 மற்றும் ரூபா 94,066,762 என்பவற்றைக் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை தலைமைச் செயலகம் மேற்கொள்ளவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியதாகவிருந்த புரள்வு வரி நிலுவை ரூபா 243,392,455 ஆகும். இதனை அறவிடுவதானது 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளின்போது மிகவும் குறைந்த மட்டத்திலான 11.43 சதவீதம் முதல் 0.37 சதவீதம் வரையில் அமைந்திருந்ததுடன் மேலும் ரூபா 93,946,012 அறவிடப்பட வேண்டியுமிருந்தது.

(உ) வடமேல் மாகாண பிரதித் தலைமைச் செயலாளரது 2004 மே 27 ஆந் திகதிய வபிரலே/5/3/13/7-2 ஆம் இலக்க மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம், அறவிடப்படமுடியாத குத்தகை வரியைப் பதிவழிப்பதற்கான அதிகாரம் ரூபா 100,000 எனும் வரம்பிற்கு உட்பட்டதாக, அறவிடப்பட வேண்டிய புரள்வு வரி 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 32,366,302 ஆகவும் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 75,142,594 ஆகவும் மாகாண வருமான ஆணையாளரால் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், மேற்படி கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம், பதிவழிக்கப்பட்ட குத்தகை வரி தொடர்பான மாதாந்த அறிக்கை தலைமைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. புரள்வு வரி நிலுவையைப் பதிவழிப்பதற்கான விபரம் கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் முன்னைய ஆண்டினது கணக்கின் பிரகாரம், ரூபா 7,616,648 ஆகியபோதும், மீளாய்வாண்டினது ஆரம்ப மீதி ரூபா 4,845,009 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

## 04. நிதிசார் மீளாய்வு

## 4.1 நிதிப்பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 216,897,422 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,400,467,030 ஆகும்.

## 4.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

### 4.2.1 வருமானமும் செலவினமும்

| | 2016 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றானது | வேறுபாடு | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றானது | வேறுபாடு |
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| **வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 6,653.00 | 6,555.69 | 97.31 | 5,450.00 | 5,658.70 | (208.70) |
| வரியல்லாத வருமானம் | 863.00 | 826.84 | 36.16 | 725.00 | 724.03 | 0.97 |
| அரச மானியம் | 35,345.88 | 25,700.77 | 9,645.11 | 24,927.33 | 24,417.02 | 510.31 |
| வேறு பெறுவனவுகள் | 195.03 | 135.72 | 59.31 | - | - | - |
| மொத்தம் | **43,056.91** | **33,219.02** | **9,837.89** | **31,102.33** | **30,799.75** | **302.58** |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 23,285.91 | 23,225.71 | 60.20 | 22,213.90 | 21,859.94 | 353.96 |
| ஏனையவை | 6,073.60 | 4,998.35 | 1,075.25 | 5,486.51 | 4,828.78 | 657.73 |
| உப மொத்தம் | 29,359.51 | 28,224.06 | 1,135.45 | 27,700.41 | 26,688.72 | 1,011.69 |
| மூலதனச் செலவினம் | 13,697.40 | 4,778.06 | 8,919.34 | 3,401.92 | 2,710.56 | 691.36 |
| மொத்தம் | **43,056.91** | **33,002.12** | **10,054.79** | **31,102.33** | **29,399.28** | **1,703.05** |

மீளாய்வாண்டினது மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்கிடையேயான விகிதம் 6:1 ஆகும்.

## 05. சட்டவாக்கக் கணக்குகள்/ நிதியக்கணக்குகள்/ வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்

## 5.1 அதிகார சபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்

(அ) கணக்காய்வு அபிப்பிராயம்

வடமேல் மாகாண சபையில் நிறுவப்பட்டுள்ள 09 அதிகார சபைகள் மற்றும் 05 நிதியங்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகும்.

(ஆ) கணக்காய்வு அவதானிப்புகள்

(i) மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை

குருநாகலை போதனா வைத்தியசாலைக்கான சுத்திகரிப்புச் சேவையைப் பெறுவதற்கான உடன்படிக்கையின் போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான மாற்றம் உட்படுத்தப்படாமையால் 2016 ஆம் ஆண்டுக்குரிய நிலுவையாகிய ரூபா 7,369,426 குருநாகலை போதனா வைத்தியசாலையிடமிருந்து அறவிடப்படுவது நிச்சயமற்றதாகி இருந்தது.

(ii) வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

- மதுரங்குளி சுற்றுலாத் தகவல் மற்றும் வசதிகளுக்கான நிலையம் ரூபா 53.3 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் முதல் கட்ட வேலைகள் முடிவுற்ற தினத்திலிருந்து வருமானத்தை ஈட்டுவதற்கு பயன்படுத்தக்கூடியதாகவிருந்தும் முகாமைத்துவம் அது தொடர்பாக கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

- வடமேல் மாகாண சுற்றுலா ஹோட்டல் பாடசாலையினது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று 2014 நவம்பர் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டபோதும், அதன் சொத்துக்களுக்குக் குத்தகை வாடகையைப் பெறுவதற்கு இணக்கம் ஏற்படுத்தப்படாமையால் அதிகார சபைக்குரிய ரூபா 112 மில்லியன் சொத்துக்களின் மூலம் எதுவித நிதிசார் நலனையும் பெறமுடியாது போனது.

- 2014 நவம்பர் 01 ஆந் திகதிய உடன்படிக்கையினடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த படகமுவ சுற்றுலா நிலையத்தின் 03 ஆம் 04 ஆம் இலக்கக் கடைகளது குத்தகை உடன்படிக்கைகளுக்குரிய நிபந்தனைகள் மீறப்பட்டமையால் அதிகாரசபை 2015 மே 14 ஆந் திகதியன்று உடன்படிக்கையை இரத்துச் செய்திருந்தது. அதன் காரணமாக, குத்தகையாளர் அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தார். அத்துடன் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் குறித்த சர்ச்சை தீர்வுக்கு வராமையால் அதிகாரசபை ரூபா 1,04,385 இழப்பிற்குள்ளானது.

(iii) வடமேல் மாகாண இயந்திர சாதன அதிகாரசபை

---

- 2016 மற்றும் 07 ஆண்டுகளுக்கு முன்னருக்கான நிச்சயிக்கப்பட்ட கட்டணமாகக் அறவிடப்பட்ட ரூபா 19,555,610 கூட்டுத் தொகையுடைய வரி 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

- மீளாய்வாண்டினதும் முன்னைய 03 ஆண்டுகளினதும் ரூபா 6,186,957 கூட்டுத்தொகையுடைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு அனுப்பி வைக்கப்படாமையால் ரூபா 523,937 தண்டப் பணமாக செலுத்தப்பட வேண்டியேற்பட்டது.

- இயந்திர சாதன அதிகாரசபையின் நிதி நிலைமை நலிவுற்றதால் வங்கி மேலதிகப்பற்று பெறப்பட்டு அதன் காரணமாக மீளாய்வாண்டில் வங்கி மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 953,423 செலுத்தவேண்டி ஏற்பட்டது.

(iv) வடமேல் மாகாண ஜனகலா மன்றம்

---

குருநாகலை ஜனகலா மன்றம் மற்றும் சிலாபம் விஸ்கம் விடுதிகளது 2016 ஆம் ஆண்டின் மொத்த நட்டம் ரூபா 1,799,033 ஆகும். எவ்வாறாயினும், மன்ற முகாமைத்துவம் அந்நிலையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

(v) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை

---

- சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிராத கைத்தொழில்கள் சம்பந்தமாகவும் சுற்றாடல் பாதிப்பைக் குறைத்துக் கொள்வதற்குமான நடவடிக்கைகள் தொடர்பாக சுற்றாடல் சட்டவாக்கங்களை அமுலாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

- பொது நிர்வாக அமைச்சினது செயலாளரின் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய ரூபா 250,000 இடர்க் கடனை அதிகரிக்கும் விதத்தில் ஒரு தடவையில் 500,000 வீதம் 13 உத்தியோகத்தர்களுக்கு இடர்க் கடன் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், அதற்கான அங்கீகாரமின்றி ரூபா 3,500,000 நிலையான வைப்புகளும் காசாக மாற்றப்பட்டிருந்தன. மேலும், அவ்வுத்தியோகத்தர்களில் 11 பேரது பழைய இடர்கடன் மீதியாகிய ரூபா 998,980 ஈடு செய்யப்பட்டுத் தீர்த்து வைக்கப்படவுமில்லை.

(vi) கைத்தொழில் சேவைப் பணியகம்

---

கைத்தொழில் சேவை பணியகம் வெளி நபர்களுக்கு வழங்கியிருந்த சேவைகளுக்கு ஏறக்குறைய 03 ஆண்டுகளாக நிலுவையாக இருக்கும் ரூபா 547,098 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(vii) முதலமைச்சர் நிதியம்

---

மீளாய்வாண்டின்போது முதலமைச்சர் நிதியத்திலிருந்து விளையாட்டுதுறை மற்றும் கல்விசார் விடயங்களுக்குப் பணம் எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) வடமேல் மாகாண வள அபிவிருத்தி அதிகாரசபை

---

மீன்களைச் சினைப்படுத்துதல் மற்றும் மீன் உற்பத்திச் செயற்திட்டம் என்பன 04 ஆண்டுகளாக அமுலாகாமையால் ரூபா 4,140,000 பெறுமதியான மீன் உற்பத்தி நிலையக் கட்டிடமும் ரூபா 4,925,000 பெறுமதியான அலங்கார மீன் தடாகமும் வெறுமனே இருக்கும் நிலைக்குள்ளாகின.

(ix) வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்

---

ஓய்வூதியத் திட்ட நடவடிக்கைகள் கணனி மயப்படுத்தப்படுவதற்காக 2010 ஆம் ஆண்டின்போது வடமேல் மாகாண பயிற்சி நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூபா 168,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் குறித்த பணி முடிவுறவில்லை. மேலும், அந்நிதியத்தின் நடவடிக்கைகளைக் கணனிமயப்படுத்துவதற்கென 2016 ஆம் ஆண்டின் போது மீண்டுமொருமுறை ரூபா 600,000 நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், 2017 மே மாதமளவிலும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(x) வடமேல் மாகாண விளையாட்டு நிதியம்

---

- வடமேல் மாகாண சபையின் 1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க விளையாட்டுத் துறை சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் கலைக்கூடங்களுக்கு மாணாக்கரைச் சேர்த்துக் கொள்ளுதல், கல்வி, பயிற்சி மற்றும் பரீட்சைகளை நடாத்துவது போன்ற விடயங்கள் சம்பந்தமான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- போதியளவு உடற்பயிற்சி உபகரணங்களும் வசதிகளும் இன்மையாலும் உடற்பயிற்சிகளுக்கான பயிற்சியாளர் ஒருவர் இன்மையாலும் உடற்பயிற்சிப் பிரிவின் மீளாய்வாண்டு வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 82 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

**5.2 வணிக முற்பணக் கணக்குகள்**

---

(அ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் மூலப் பொருட்களை வழங்குதல் அடங்கலாக புடவைக் கைத்தொழில் தொழிற்சாலைகளை உருவாக்குதலும் நிர்வகித்தலும் சம்பந்தமான வணிக முற்பணக் கணக்கின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 18,573,677 மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 10 ஆண்டுகள் மற்றும் 02 ஆண்டுகள் கடந்திருந்த கடன் மீதிகள் முறையே ரூபா 1,598,588 மற்றும் ரூபா 7,488,735 என்பனவாகும். இவற்றை அறவிடுவதற்கு நிர்வாகத்தினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) சிறு கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான கைத்தொழில் பாடசாலைகளில் பயிற்சிக்கென ஆட்சேரும் மாணாக்கரது எண்ணிக்கை வருடாந்தம் குறைவடைந்தமையால் ரூபா 6,338,600 பெறுமதியான இயந்திர சாதனங்களும் உபகரணங்களும் வெறுமனே இருக்கும் காலம் அதிகரித்தவாறிருந்தது.

(இ) வடமேல் மாகாண பயிற்சி நிறுவன முற்பணக் கணக்கில் ரூபா 16,000,000 செலவின் சேர்ந்து நின்ற செலவின வரம்பு ரூபா 302,272 அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஈ) 2016 நவம்பர் 04 ஆந் திகதிய 2016/20 ஆம் இலக்க பெறுமதி சேர் வரித் திருத்த அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக் கடப்பாட்டிற்குத் தம்மை பதிவுசெய்து கொள்வதற்கு வடமேல் மாகாண பயிற்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 6.1 செயலாற்றல்

--------------------

(அ) சிலாபக் கல்வி வலயத்தில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடையாதோரின் சதவீதம் 39 முதல் 47 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) குருநாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான யானை நோய் தடுப்புக் கூறினால் 2015 ஆம் ஆண்டின்போது குருநாகலையில் 49,072 பேரினது யானைக்கால் வியாதி இரத்த மாதிரிகளைப் பரிசீலித்திருந்ததுடன், அது மாவட்ட மொத்தச் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதம் மாத்திரமே ஆகும் என்பதால் பரிசீலனை நடவடிக்கைகள் போதுமானதாக அமையவில்லை.

(இ) குருநாகலை மாவட்டத்தில் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 1,378 மற்றும் 2,563 டெங்கு நோயாளிகள் காணப்பட்டதானது 2015 உடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் நோயாளிகளது எண்ணிக்கையில் 46 சதவீத அதிகரிப்பாக இருக்கையில் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சிதிட்டத்திற்கென 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 6,613,500 தொகையில் ரூபா 892,720 சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஈ) குருநாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 10 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு நாய்க்கடித் தடுப்பு ஊசிகளை வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின்போது அது அமுல்படுத்தப்படுவது தவறியிருந்தது.

(உ) சிறுநீரக நோய் பெருமளவில் காணப்படும் அம்பன்பொல, கொபெய்கனே, பொல்பித்திகம, கல்கமுவ, கிரிபாவ, நிக்கவரட்டிய, மஹவ ஆகிய பிரதேசங்களில் சிறுநீரக நோயாளிகளை இணங்கண்டு கொள்ளுதல் மற்றும் நோயாளிகளைப் பரிசீலித்தல் என்பவற்றிற்குச் சுகாதார சேவைகள் திணைக்களம் ரூபா 5,000,000 நிதியேற்பாடு செய்திருந்தபோதும், மீளாய்வாண்டின்போது பெறப்பட்டது ரூபா 1,583,770 மாத்திரமே.

(ஊ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 102 நிலையங்களின் மூலம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 103 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்டபோதும், உள்ளவாறு பெறப்பட்ட வருமானம் ரூபா 39.5 மில்லினனேயாகும். அதில் 75 சதவீதம் 8 நிலையங்களிலிருந்து பெறப்பட்டதாகும்.

(எ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாகப் பெறப்பட்ட ஆரம்ப ஒழுக்காற்று பரிசீலனைகளது 31 கோவைகள் சம்பந்தமாக முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒழுக்காற்றுக் கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு 2017 ஏப்ரல் 18 ஆந் திகதியளவிலும் தவறியிருந்தது.

(ஏ) 2016 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ‘‘துர்ப்பிரயோகம் இன்றி சிறுவர் உரிமைகளை உறுதி செய்தல்’’ தொடர்பான பல்வேறு சமூக சேவைகள் பிரிவை இலக்காகக் கொண்டு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அதிகாரத்துக்குட்பட்ட 09 பிரதேசங்களில் நடாத்துவதற்கு நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் திட்டமிட்டிருந்தபோதும், 05 பிரதேசங்களில் மாத்திரமே நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பாடசாலை மாணாக்கர் மாத்திரமே இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தனர்.

## 6.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தால் நன்னடத்தைக்கான சிறுவர்கள் சம்பந்தமான தகவல்கள் முறைப்படி நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படாமையால் மீளாய்வாண்டின்போது

நன்னடத்தைக்கு விடுவிக்கப்பட்ட சிறுவர்களைச் சமூகமயப்படுத்துவதற்கு எதிர்பார்த்த மட்டத்தை அடையக்கூடியதாக இருந்ததா என்பதைக் கணக்காய்வில் உறுதிசெய்ய முடியாதிருந்தது.

(ஆ) மாகாண சபை வளாகத்தில் இலங்கை வங்கிக் கிளை ஒன்று நிறுவப்பட்டிருந்தபோதும், அதற்கான குத்தகை வாடகை, நீர், மின்சாரக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வங்கி முகாமைத்துவம் மற்றும் மாகாண சபை என்பவற்றுக்கிடையேயான உடன்படிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு தேவையான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதானது முறைப்படி திட்டமிடப்படாததால் 2016 ஆம் ஆண்டில் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 188,228,458 கூட்டுத் தொகையுடைய மருத்துவ உபகரணங்கள் 2017 பெப்ரவரி16 ஆந் திகதியளவிலும் திணைக்களத்தை வந்தடையவில்லை.

(ஈ) சிறு கைத்தொழில் திணைக்களத்தின் 16 கயிற்றுக் கைத்தொழில் நிலையங்களின் மூலம் ஆண்டின்போது ரூபா 100,000 வருமானமீட்ட எதிர்பார்க்கப்பட்ட போதும், ஆண்டின்போது அதற்கான கட்டளைகள் எதுவும் பெறப்படவில்லை.

(உ) ஐந்து நன்னடத்தை அலுவலகங்களது 14 சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட 58 சிறுவர்களைச் சமூகமயப்படுத்தும் நடவடிக்கைகளை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மேற்கொள்ளவில்லை.

(ஊ) வடமேல் மாகாணத்தில் உள்ள 09 சிறுவர் இல்லங்களில் தங்குமிட வசதியானது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 01 முதல் 20 வரை அதிகரித்ததால் சிறுவர் நலனோம்பல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் சாதகமற்ற நிலமையில் இருந்தன.

(எ) சமூக சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விசேட மருத்துவ உதவி விண்ணப்பங்கள் தொடர்பான உதவிகளை வழங்குவதற்கு 1 ½ முதல் 3 ஆண்டுகால தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஏ) வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள இரு பாலார் பாடசாலைகளில் 126 தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் 36 பாடசாலைகளில் மாத்திரம் உயர்தர விஞ்ஞானம்/ கணித

வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த 20 பாடசாலைகளில் 2015 ஆம் ஆண்டில் விஞ்ஞான/ கணிதப் பிரிவில் 127 மாணாக்கர் கல்வி பொதுத் தராதரச் சான்றிதழ் (உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றியபோதும் 11 மாணாக்கர் மாத்திரமே சித்தியடைந்திருந்தனர்.

(ஐ) நோயாளர் சிகிச்சைச் சேவைகளுக்கு போதியளவு ஔடதங்கள் உற்பத்தி செய்யப்படாமையால் மாகாண ஆயுள்வேதத் திணைக்களத்தில் மீளாய்வாண்டின்போது ரூபா 6,694,875 பெறுமதியான 14 வகை ஔடதங்கள் ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஒ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ரூபா 1,826,250 பெறுமதியான வேரஹெர பிரதேச கூட்டுறவுக் கட்டிட நிர்மாண வேலை ஒப்பந்தத்தைப் பொருட் கொள்வனவு நடைமுறைகளுக்கு விதிவிலக்காக கட்டுகம்பொல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கியிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின்போது குருநாகலை, குளியாப்பிட்டிய, மஹவ, சிலாபம் என்னுமிடங்களில் உள்ள கூட்டுறவு உப ஆணையாளர்கள் அலுவலகங்களுக்குப் பல்வேறு நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 68,355,626 கூட்டுத் தொகையுடைய வைப்புகளும் நீதிமன்றத் தண்டப்பணமும் குறித்த சங்கங்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஔ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு 38 இலத்திரனியல் நூல் நூற்கும் தையல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குனர் ஒருவருக்கு 2016 இறுதி இரு மாதங்களிலும் ரூபா 399,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், 17 இயந்திரங்கள் 2017 மே 29 ஆந் திகதியளவிலும் வழங்கப்படாதிருந்தன.

(க) சிறு கைத்தொழில் திணைக்களம் மீளாய்வாண்டின்போது திகதி குறிப்பிடாது கட்டளை வழங்கியிருந்த 1" நான்கு மூலை கினிசபு பலகைகள் 1500 ஆகும். இவற்றுள் மீளாய்வாண்டின் முடிவில் வழங்கப்பட்டவை 514 நான்கு மூலைப் பலகைகளே ஆகும். எவ்வாறாயினும், மொத்தப் பலகைகளும் பெறப்பட்டதாக பலகைக் கையிருப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு 2016 டிசெம்பர் 26 ஆந் திகதியன்று மொத்தத் தொகையான ரூபா 165,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ங) நவகத்தேகம பிரதேச செயலக அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் சேகரிக்கப்படும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான திண்ம முகாமைத்துவச் செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நவகத்தேகம பிரதேச செயலாளர் யோக்கியதையுள்ள காணி ஒன்றை வழங்காமையால் ரூபா 1,776,350.66 நிதியேற்பாட்டை பிரதேச சபை திருப்பியனுப்பியிருந்தது.

(ச) மாதம்பே பிரதேச செயலகப் பிரிவின் இரட்டைக்குளம் வடக்கில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவில் அரசாங்கத்துக்குரிய 171 ஏக்கர் காணியை நெடுங்கால குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பமாகியிருந்தன.

(ஞ) தனியார் கம்பனி ஒன்றிற்கு நெடுங்கால குத்தகையில் வழங்கப்பட்டுள்ள ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவின் 01ஏக்கர், 02றூட், 35 பேர்ச்சர்ஸ் காணியின் பொருட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 12,408,750 குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ட) ஐந்து பிரதேச செயலகங்களில் உள்ள அரச காணிகளைக் குத்தகைக்கு வழங்கும் அடிப்படையில் மீளாய்வாண்டின் வருடாந்த குத்தகை வரி நிலுவையாகிய ரூபா 457,664 மற்றும் நெடுங்காலக் குத்தகை வரியான ரூபா 1,222,757 என்பனவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ண) மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் சாரதி ஒருவர் மோசடியான கல்விச் சான்றிதழை சமர்த்திருப்பது 2013 பெப்ரவரி மாதத்தில் பரீட்சை ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தும், அவரது சேவையை இடை நிறுத்துவது 2015 யூன் வரை தாமதமாகியிருந்தது. சட்டபூர்வமற்ற சம்பளமாக ரூபா 693,490 அக்காலப்பகுதியின்போது வழங்கப்பட்டிருந்தது.

(த) நாத்தாண்டியா பிரதேச செயலகம் பிணைப்பணத்தை பெறுகையில் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கிய பற்றுச்சீட்டுக்களை மீளப்பெறாது 2 பிணைகளுக்குரிய ரூபா 158,354 விடுவிக்கப்பட்டிருந்தது.

(ந) கிரிஉல்ல வலயக் கல்வி அலுவலகத்தின் வங்கிக் கணக்கில் 2010/2011 ஆண்டுகளில் ஏற்பட்ட நிதி மோசடி மூலம் ஏற்பட்ட வங்கி மேலதிகப்பற்று ரூபா 13,609,655 ஆகும். இதனைத் தீர்த்து வைப்பதற்கு மாகாணத் திறைசேரி வைப்புக் கணக்கிலிருந்து வழங்கிய முற்பணமானது பொறுப்பான நிதி நிறுவனம்/ நபரிடமிருந்து மீள அறவிடப்படுவதற்கான சட்டபூர்வ நடவடிக்கைகள் மீளாய்வாண்டு முடிவிலும் மேற்கொள்ளப்படவில்லை.

இம்மோசடிக்கு மக்கள் வங்கி சட்டபூர்வமாகப் பொறுப்புடையதாகும் எனத் தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அவ்விழப்பை ஈடுசெய்வதற்கான இணக்கத்தை 2011 யூன் 30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அது தெரியப்படுத்தியிருந்தது.

## 6.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தளம் மாவட்ட சுகாதார பணிப்பாளர் அலுவலகத்துக்குரிய அம்புலன்ஸ் வண்டியொன்று பழுதுபார்க்கப்படுவது தொடர்பாக 2015 யூன் 04 ஆந் திகதிய ரூபா 152,000 கூறு விலையின் பொருட்டு மாகாண சுகாதார அமைச்சினது செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு 06 மாதங்கள் சென்றமையால் மேற்படி தொகைக்கு பழுதுபார்த்தலை மேற்கொள்வதை கராஜ் ஏற்க மறுத்திருந்தது. ஆகவே, இரண்டாவது அதி குறைந்த கூறு விலையான ரூபா 235,000 ஐச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடம் அது கையளிக்கப்பட்டு 2017 சனவரியிலும் பழுது பார்த்தல் நிறைவடையாதிருந்தது.

(ஆ) புத்தளம் மாவட்ட சுகாதார பணிப்பாளர் அலுவலகத்துக்குரிய அம்புலன்சு வண்டியொன்று ரூபா 18,500 தொகையில் பழுதுபார்க்கப்படுவதற்கு 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதி கராஜில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2 ½ ஆண்டுகளுக்குப் பின்னர் கராஜ் சமர்ப்பித்திருந்த மற்றுமொரு மதிப்பீடான ரூபா 429,500 அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) புத்தளம் மாவட்டத்தின் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்துக்குரிய அம்புலன்சு வண்டியொன்றின் பழுது பார்த்தல் ரூபா 21,500 மதிப்பீட்டில் 2013 ஒக்தோபர் மாதத்தில் கராஜ் ஒன்றிடம் கையளிக்கப்பட்டிருந்தது. 2 ½ ஆண்டுகளுக்குப் பின்னர் கராஜ் சமர்ப்பித்திருந்த ரூபா 202,800 மதிப்பீட்டை அங்கீகரிப்பதன் பொருட்டு அது அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாலைப்பொழுதில் பால் சேகரிப்பதை மேம்படுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 10,237,830 செலவில் 56 அதி கூடிய குளிரூட்டிகளையும் 15 மினி கூலர்களையும் கொள்வனவு செய்து பால் சேகரிக்கும் நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த உபகரணங்கள் நேரடிப் பரிசீலனைக்குள்ளான போது பல்வேறு காரணங்களின் நிமித்தம் 5 பால் சங்கங்களால்

அக்குளிரூட்டிகள் பயன்படுத்தப்படாதிருந்தமையும் அதன் காரணமாக சேகரிக்கப்படும் பால் பயன்படுத்தப்பட்டு புதிய பால் மற்றும் பால் உற்பத்தி பொருட்கள் உற்பத்தியாவதை மேம்படுத்தும் நோக்கமும் அமுலாகாது போனமையும் அவதானிக்கப்பட்டன.

(உ) மாகாண விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தால் வாரியப்பொல விலங்கின மருத்துவப் பிரிவில் பாற்பண்ணைகளது அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு 2015 மே மாதத்தில் வழங்கிய ரூபா 701,905 பெறுமதியான மினி ஆய்வுகூடம் ஒன்றும் மினிகூலர் ஒன்றும் 2017 யூன் மாதத்திலும் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஊ) மாகாண விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் பால் மற்றும் பால் உற்பத்தி பொருட்கள் நுகர்வை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 447,040 பெறுமதியில் கொள்வனவு செய்து விநியோகித்திருந்த உபகரணங்களில் 05 நலன் பெறுனர்களுக்கு வழங்கியிருந்த தர்மோஸ்டெட், பாலைச் சூடாக்கும் பல்வகைப் பாத்திரங்கள், வாயு அடுப்புகள், கிரீம் செபரேட்டர், போத்தல்களை மூடியிட்டு அடைக்கும் உபகரணம் மற்றும் பிரெஷர் குக்கர் போன்ற உபகரணங்கள் பல்வேறு காரணங்களால் பயன்படுத்தப்படாதிருந்தன.

(எ) அரச காணிகளை முகாமைத்துவமிடும் E-Slim நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டின் முடிவளவிலும் குருநாகலை மாவட்டத்தில் 120,000 காணித் துண்டுகள் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 50,000 காணித் துண்டுகள் என்பவற்றினது தரவுகளை உள்ளடக்குவதற்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தால் ரூபா 1,994,850 பெறுமதியான 16 டெப்கள் மற்றும் 15 லெப்டொப் கணனிகள் என்பன கொள்வளவு செய்யப்பட்டு குடியேற்ற உத்தியோகத்தர்களிடம் வழங்கப்பட்டிருந்தன. எனினும், ஆண்டின் இறுதியளவில் குருநாகலை மாவட்டத்தில் 13,563 காணித் துண்டுகள் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 19,268 காணித்துண்டுகள் என்பன மாத்திரமே பரிசீலிக்கப்பட்டு அவற்றின் தரவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஏ) வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு, நிர்மாணத்துறை, கைத்தொழில், கிராம அபிவிருத்தி அமைச்சினால் 140X35 அடி அளவிலான கிராம அபிவிருத்திப் பயிற்சி நிலையக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2007 ஆம் ஆண்டின்போது ரூபா 900,000 செலவிடப்பட்டு அட்டமுனே வித்தியாலய வளவில் அத்திவாரமிடப்பட்டிருந்தது. பின்னர் அப்பணி கைவிடப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின்போது மாகாண கமத்தொழில் திணைக்களம் 20,300 உகுல், 6,250 பிரதிரோதி வலைகள், 120 பப்பாளிப் பழங்களைப் பிழியும் உபகரணங்கள், 20 ஏணிகள், 755,300 கறுப்பு நிற பொலித்தீன் பைகள், 700 பொலித்தீன் துண்டுகள், 20,000 பொதியிலடைத்தல் பொருட்கள் ஆகியவற்றை ரூபா 13,349,175 க்குக் கொள்வனவு செய்கையில் பொருட்கொள்வனவு வழிகாட்டியைக் கடைப்பிடிக்கவில்லை.

(ஒ) வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவில் 2013 முதல் 2015 வரை உள்ள அரச காணிகளை அத்துமீறி கைப்பற்றியமையைச் சட்டபூர்வமாக்குவது மற்றும் நெடுங்கால குத்தகை என்பவற்றிற்கான அங்கிகாரத்தைக் கோரி 15 கோவைகள் மாகாணக் காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. எனினும், 2016 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ரிதிகம பிரதேச செயலகப் பிரிவில் உள்ள காணி ஒன்று நெடுங்காலக் குத்தகையின் அடிப்படையில் மொபிடெல் (பிரத்தியேக) கம்பனி ஒன்றிற்கும் மக்கள் வங்கிக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன், குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை மீளாய்வு செய்யப்பட்டு அறவிடப்படாமையால் ரூபா 648,000 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஔ) பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகத்துக்குரிய அரச காணிகள் நெடுங்காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கையில் 2003 முதல் 2016 வரை வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,456,400 குத்தகைப் பணம் மாகாண சபையால் அறவிடப்பட வேண்டியிருந்தது. அம்மீதியுள் தேசிய நீர் வழங்கல் சபையால் 2004 முதல் 2006 வரை பெற வேண்டிய ரூபா 172,800 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

(க) வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களத்தின் மூலம் ரூபா 55,056,581 நிதியேற்பாட்டில் மேற்கொண்ட 10 நிர்மாண வேலைகளின்போது ரூபா 40,669,635 பெறுமதியான வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. மதிப்பிடப்பட்ட வேலைகள் பின்பு மீளாய்வு செய்யப்பட்டமையால் ரூபா 3,350,812 பெறுமதியான வேலைகளுக்கு முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ங) வாரியப்பொல பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தால் வெல்லேகல மஹா வித்தியாலயக் கைப்பந்து விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்படுகையில்

விளையாட்டு மைதானத்திற்கான பெயர்ப் பலகையைப் பொருத்துதல் மற்றும் பிளாஷ் லைட் பொருத்துதல் என்பவற்றிற்கு ரூபா 410,000 பெறுமதியான வேலைகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக மேலதிக பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ச) வடமேல் மாகாணத் திணைக்களப் பதவியணியில் 03 வீடமைப்பாளர்களும் 17 சிவில் பொறியியலாளர்களும் சேவையில் இருக்கையில் வெளித்தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட வீடமைப்புத் திட்டம் மற்றும் மதியுரைச் சேவைகளுக்காக 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளின்போது ரூபா 2,788,488 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஞ) குருநாகலை வலயக் கல்வி அலுவலகத்தால் 15 பாடசாலைகளில் 176 புலமைப்பரிசில் பெற்றவர்களின் பொருட்டு 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்கான மாணாக்கர் உதவிப் பணமாகிய ரூபா 210,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ட) 2014 ஆம் ஆண்டிற்கான தரவுகளின் பிரகாரம், வடமேல் மாகாண சிறுநீரக நோயாளர் பெருமளவில் உள்ள 183 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இருந்தன. எவ்வாறாயினும், அதில் 79 பிரிவுகளுக்கு மாத்திரம் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 218,000,000 செலவிடப்பட்டு மீள ஒன்றிணைந்த வடிநீர்க் கூறுகள் நிறுவப்பட்டிருந்தன.

(ண) உத்தரவாதக் காலப்பகுதியின்போது முற்றாகச் செயலிழந்திருந்த ரூபா 3,400,000 பெறுமதியான கிரிபாவ இஹல பரதங்கடவல மீள ஒன்றிணைந்த வடி நீர் முறைமைக்குப் பதிலாக புதிய வடி நீர் முறைமை ஒன்றை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் குளியாப்பிட்டிய நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தால் துங்தொட்ட படிவெல வீதியின் 10.8 கிலோ மீட்டர் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் யூலை 30 ஆந் திகதியளவில் 05 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 6,376,248 ஆகும். எவ்வாறாயினும், குறித்த பராமரிப்பு நடவடிக்கைகள் நியமங்களுக்கேற்ப இருக்கவில்லை என்பது 2016 யூலை மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் ஹங்ஹமுன தம்பிட்டிய வீதியில் 1.57 கிலோமீட்டர் 2016 மார்ச்சில் ரூபா 1,006,443 செலவில் பராமரிக்கப்பட்டிருக்கையில் அதேயளவு தூரத்திற்கு ஈடாக 1.39 கிலோமீட்டர் அபிவிருத்தி செய்வதற்காக 2016 யூன் யூலை மாதங்களில் ரூபா 1,999,785 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மாகாண அபிவிருத்தித் திணைக்களத்தால் 2016 நவம்பர் மாதமளவில் ரூபா 1,585,096 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட தம்பரவல வாய்க்கால் வீதி, பின்னர் கார்ப்பட் வீதியாக 2016 டிசெம்பரில் மாற்றத்துக்கு உள்ளானதால் மேற்படி தொகை பயனற்ற செலவினமாகியது.

(ஈ) மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் தப்போவ பிலாக்கட்டுமுல்ல வீதி அபிவிருத்திக்காக ரூபா 986,619 மதிப்பீட்டில் முதியோர் அடங்கிய தனி நபர் குழு ஒன்றுடனான உடன்படிக்கையில் வேலை ஆரம்பிக்கப்பட்டு, காரணம் தெரிவிக்கபடாது அப்பணி கைவிடப்பட்டிருந்தது.

## 6.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

கனேவத்த பிரதேச செயலகத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 30.704 ஏக்கர் விசாலமுடைய காணி 1999 ஆம் ஆண்டின்போது ரூபா 304,000 குத்தகைத் தொகையில் 30 ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட்ட (மக்கள்) ஹிரியால விவசாய கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அக்கம்பனி அக்காணியைத் தனியார் வங்கி ஒன்றில் பிணையாக வைத்துக் கடனைப் பெற்றிருந்தது. விவசாயக் கம்பனி செயலற்றுப் போனமையால் குறித்த காணியைப் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை வங்கி மேற்கொண்டிருந்தது.

## 6.6 பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

---

மாகாண சபையின் பல்வேறு நிறுவனங்களில் கீழே குறிப்பிட்டவாறு பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் இருந்ததுடன், அவற்றைப் பொருத்தமானவாறு பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | அலுவலகம் | சொத்து வகை | பெறுமதி | பயன்படுத்தப் படாத காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | MICRO HEMOTOCRIT - 02<br>CENTRIFUGE - 01 | - | 01 |
| | குளியாப்பிட்டிய அடிப்படை மருத்துவமனை | MINI AUTOCCAVE - 01<br>HEMOTOCRIT - 02<br>INCUBATOR | - | 03 |
| (ஆ) | சிலாபம் பிரதேச செயலகம் | விளையாட்டுத்துறை உபகரணங்கள் | 220,396 | 02 |
| (இ) | மாகாண சுகாதாரத் திணைக்களம் | STETHESCOPE - 14<br>HOT PLATE - 02 | - | 01-03 வரை |
| | மல்லவபிட்டிய சுகாதாரத் திணைக்களம் | சத்திரசிகிட்சை உபகரணங்கள் - 67<br>குளுகோமீட்டர் - 03<br>IV, CANULA - 20 | | |
| (ஈ) | மாகாண சுகாதாரத் திணைக்களம் | உத்தியோகபூர்வ மருத்துவமனைகள் - 03 | - | 2 ஆண்டுகளுக்கு மேல் |
| | நாரம்மல மருத்துவமனை | 14 அறைகளுடனான பொது உத்தியோகபூர்வ மனை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | மாகாண சுகாதாரத் திணைக்களம் அம்பன்பொல மருத்துவமனை | உபகரணங்களுடன் கூடிய சிறுவர் வார்ட்டுகள் | - | 08 |
| (ஊ) | மாகாண சுகாதாரத் திணைக்களம் அளவ்வை சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம் | 14 வகையான சத்திர சிகிச்சை உபகரணங்களது 174 கூறுகள் | - | 01-14 வரை |
| (எ) | பொல்பித்திகம ரம்பே கலாசார திணைக்களம் | கட்டிடங்கள் | 9,024,858 | 01 |
| (ஏ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்-மடஹபொல மருத்துவ சிகிச்சைக்கூறு | கட்டிடங்கள் | 1,060,760 | 01 |
| (ஐ) | மாகாண கல்வித் திணைக்களம்-மஹவ கல்வி வலயம் | பாலுகடவல ஆசிரியர் விடுதி நிலையம் | 16,815,000 | 04 |
| (ஒ) | மாகாண சுகாதார அமைச்சு | லிய இந்துவர சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்ட வங்கிக் கணக்குகள் - | 4,683,947 | 02 |

02

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களம் | நூலை வர்ணமயப்படுத்தப்படும் இயந்திரம் | 2,783,200 | 04 |
| (ஔ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்- குளியாப்பிட்டிய மருத்துவ மனை | பழுதுபார்க்கப்பட்ட நோயாளரது வார்ட்டு ஒன்று | 2,139,831 | 01 |

## 6.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ரூபா 2,300,000 செலவில் குளியாப்பிட்டியில் நிர்மாணித்த கார்பனிக் உற்பத்தி விற்பனைக் கூடம் குறித்த நோக்கத்திற்கு ஈடுபடுத்தப்படவில்லை.

(ஆ) சிறு கைத்தொழில் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 248,645 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 03 மின் அடுப்புகள் களிமண் பயிற்சி நிலையங்களில் உள்ள மின் ஆற்றல் போதியதாக அமையாததால் 2017 மே 13 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(இ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 1,764,000 க்குக் கொள்வளவு செய்யப்பட்ட 60 கிலோகிராம் நூல் நூற்கும் இயந்திரத்தின் மூலம் ஒரு தடவையில் 12.5 கிலோகிராம் நூலையே நூற்க முடியுமாதலினால் நாளொன்றிற்கு 25 கிலோகிராம் நூலை மாத்திரம் நூற்க முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஈ) புடவைக் கைத்தொழில் திணைக்களம் 2011 ஆம் ஆண்டின்போது ரூபா 2,783,200 செலவில் நூலை வர்ணமயப்படுத்தும் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்திருக்கையில் மீளாய்வாண்டின்போது 4,904 கிலோ கிராம்

நூலை வர்ணமயப்படுத்துவதற்கு வெளிவாரி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 2,850,130 கொடுப்பவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மஹவ மற்றும் நிக்கவரட்டிய கல்வி வலயங்களில் 06 பாடசாலைகளில் கடமையாற்றிய 07 ஆசிரியர்கள் அரசாங்க சேவையில் வேறு பதவிகளுக்கு விடுவிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகியிருந்தபோதும், மஹவ ஆசிரியர்களுக்கு 16,999,058 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) புத்தளம் மருத்துவமனையில் பணியாற்றி, வேலை இடைநிறுத்தத்துக்கு உள்ளான சுகாதார அலுவலக உதவியாளர் ஒருவரது 2016 நவம்பர் மற்றும் டிசெம்பர் மாத சம்பளம் மற்றும் முன்னைய மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாகிய ரூபா 68,040 என்பனவும் குறித்த ஊழியரது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

## 6.8 இணங்காணப்பட்ட இழப்புகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கமத்தொழில், காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்கின உற்பத்தி, மற்றும் சுகாதார மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சு உயர்தர பழவிதைகள் மற்றும் மரநடுகைப் பொருட்களைப் பெறுவதற்காக முறையற்றவாறு கேள்விகளைக் கோரியதால் ரூபா 1,155,000 இழப்பு ஏற்பட்டது.

(ஆ) புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு குளிரூட்டிகளை கொள்வனவு செய்கையில் பிரசித்த நிறுவனம் ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட BG எனும் வர்த்தகப் பெயரையுடைய குளிரூட்டியைப் பயன்படுத்துவதில் முன் அனுபவம் மற்றும் அதனைப் பயன்படுத்துவதற்கான அனுபவம் இன்மை என்பவற்றை காரணமாகச் சுட்டிக்காட்டி, தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு அதனை நிராகரித்தமையால் ரூபா 181,930 இழப்பு ஏற்பட்டது.

(இ) சிலாபம் கல்வி அலுவலகப் பிரிவின் நிர்மாண வேலைகளுக்கு குறித்த காணியின் சிக்கலற்ற தெளிவான நிலமையை ஆய்ந்தறியாது ரூபா 320,622 செலவிடப்பட்டிருந்தது. குறித்த காணி தேவாலயம் ஒன்றிற்குரியது என எதிர்ப்பு உருவாகியதால் நிர்மாண வேலை கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு 02 IR LAMPS கொள்வனவு செய்யப்படுவதற்கான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் சிபார்சு வழங்கப்படும்போது பராமரிப்புக் கிரயம் கருத்திற் கொள்ளப்படாமையால் ரூபா 103,150 இழப்பு ஏற்பட்டது.

(உ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினது சிபார்சின் அடிப்படையில் மூன்றாவது அதி குறைந்த நிறுவனத்திடமிருந்து 05 ஆண்டுக்கான பராமரிப்புக் கிரயத்துடன் ULTRA SONIC SCANNER இயந்திரம் ஒன்று ரூபா 6,525,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், நியாயமான காரணத்தை அறிவிக்காது பராமரிப்புக் கிரயத்துடன் ரூபா 5,795,450 ஆகிய இரண்டாவது அதி குறைந்த விலையை நிராகரித்தமையால் ரூபா 729,550 இழப்பு ஏற்பட்டது.

(ஊ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் MULTIPARA MONITORS கொள்வனவு செய்யப்படுகையில், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் அந்த இயந்திரங்களது பராமரிப்புக் கிரயத்தை கருத்தில் கொள்ளாது நடவடிக்கைகளை மேற்கொண்டமையால், சகல தொழில்நுட்ப வடிவங்களையும் வழங்கியிருந்த நிறுவனம் ஒன்று பராமரிப்புக் கிரயத்துடன் சமர்ப்பித்த ரூபா 3,747,750 கூறு விலையை நிராகரித்து, ரூபா 6,225,000 ஆக விலை குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினது விலையிலே கொள்வனவு மேற்கொள்ளப்பட்டமையால் மாகாண சபை நிதியத்திற்கு ரூபா 2,477,250 இழப்பு ஏற்பட்டிருந்தது.

### 6.9 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கறுவலகஸ்வெவ பிரதேச செயலகத்தில் 2016 ஆம் ஆண்டின்போது மாகாண முதலீட்டு நிதியத்தின் கீழ் ரூபா 1,809,500 பெறுமதியான செயற்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவற்றுள் ரூபா 762,219 பெறுமதியான 28 செயற்திட்ட முன்மொழிதல் மாத்திரமே 2016 நவம்பர் 02 ஆந் திகதியளவில் நிறைவடைந்திருந்தன.

(ஆ) நாரம்மல பிரதேச மருத்துவமனையில் மின்தூக்கியை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,604,337 செலவிடப்பட்டு 2012 செப்தெம்பரில் வேலை முடிவடைந்திருந்தபோதும், குறித்தவாறு செயற்படாமையால் 2016 ஆம்

ஆண்டின்போது மீண்டும் ரூபா 976,620 மேலதிக செலவில் அது பழுதுபார்க்கப்பட்டிருந்தது. மேலும், 2012 முதல் 2015 வரை 06 சந்தர்ப்பங்களில் கலி பவுசர் மூலம் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டுமிருந்தன.

(இ) கொட்டவெஹெர பிரதேச மருத்துவ மனை வளாகத்தில் யானைகளிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான வேலி ஒன்றை நிர்ணயிப்பதற்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டில் ரூபா 799,997 செலவில் நிர்ணயிக்கப்பட்டிருந்த இரும்பு வேலியை காட்டு யானைகள் தகர்த்து நாசமாக்கியிருந்தன.

(ஈ) வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களத்தால் உடன்படிக்கைக்குள்ளான ரூபா 27,051,186 கூட்டுத் தொகையுடைய 08 நிர்மாண வேலை நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் முடிவடைய வேண்டியபோதும், 2017 பெப்ரவரி 21 ஆந் திகதியளவிலும் அந்நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாதிருந்தது.

(உ) வடமேல் மாகாண பொறியியல் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 971,851,291 உடன்படிக்கைப் பெறுமதியுடைய 222 செயற்திட்டங்களது வேலையில் 50 சதவீதமே மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

## 6.10 தாமதமாகிய செயற்திட்டங்கள்

குளியாப்பிட்டிய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தால் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 16,271,695 பெறுமதியுடைய 08 வேலைகள் முற்றாக நிறைவேற்றப்படவில்லை. 03 வேலைகளுக்கான தாமதக் கட்டணமாகிய ரூபா 81,939 அறவிடப்படவுமில்லை.

## 6.11 பதவியணி நிர்வாகம்

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணித் தகவல்கள் பின்வருமாறு.

**(அ) மாகாண சபை அமைச்சுகளினதும் திணைக்களங்களினதும் பதவியணி**

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 1,640 | 1,425 | 215 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 559 | 374 | 185 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 9,593 | 7,999 | 1,594 | - |
| ஆரம்ப மட்டம் | 4,527 | 4,038 | 489 | - |
| ஏனையவை | - | 120 | - | 120 |
| **மொத்தம்** | **16,319** | **13,956** | **2,483** | **120** |

**(ஆ) பாடசாலைப் பதவியணி**

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| பாடசாலை அதிபர்கள் | 1,915 | 1,400 | 515 |
| ஆசிரியர்கள் | 26,383 | 22,704 | 3,679 |
| சிற்றூழியர் | 2,696 | 2,483 | 213 |
| ஏனையவை | 503 | 316 | 187 |
| **மொத்தம்** | **31,497** | **26,903** | **4,594** |

## (இ) மருத்துவமனைப் பதவியணி

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அலுவலகப் பதவியணியினர் | 777 | 620 | 157 | - |
| மருத்துவமனைப் பதவியணியினர் | 7,981 | 6,781 | 1,520 | 280 |
| **மொத்தம்** | **8,758** | **7,401** | **1,677** | **280** |

## (ஈ) உள்ளூராட்சி நிறுவனப் பதவியணி

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 28 | 20 | 08 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 48 | 14 | 34 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 1,297 | 905 | 392 | - |
| ஆரம்ப மட்டம் | 2,534 | 3,195 | - | 661 |
| ஏனையவை | 13 | - | 13 | - |
| **மொத்தம்** | **3,920** | **4,134** | **447** | **661** |

**(உ) சட்டவாக்கத்தின் மூலம் நிறுவப்பட்ட நிறுவனங்களது பதவியணி (மாகாண சபை)**

| | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 35 | 21 | 14 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 82 | 14 | 68 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 196 | 158 | 38 | - |
| ஆரம்ப மட்டம் | 268 | 226 | 42 | - |
| ஏனையவை | - | 46 | - | 46 |
| **மொத்தம்** | **581** | **465** | **162** | **46** |

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

**6.11.1 மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களினது (கல்வி மற்றும் சுகாதாரம் நீங்கலாக) பதவியணி**

(அ) மாகாண பொறியியலாளர் திணைக்களத்தில் உள்ள 250 பதவியணியினரில் 75 எண்ணிக்கையிலானோர் முறையான இடமாற்ற முறைமையின் கீழ் அல்லாது ஒரே இடத்தில் 05 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றியிருந்தனர்.

(ஆ) மாகாண பொறியியலாளர் திணைக்களத்தின் 10 பதவிகளுக்குரிய பதவியணியில் குறைவாக இருந்தோரது எண்ணிக்கை 32 ஆகும்.

(இ) தலைமைச் செயலாளரது அலுவலகப் பதவியணியில் 05 பதவிகளில் 16 மேலதிகமும் 24 பதவிகளில் 56 பற்றாக்குறையும் நிலவின.

(ஈ) பிரதேச சபைகளது செயலாளர் பதவிகளுக்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதியுயர் தரத்தில் உள்ள 18 உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டுமாயினும், 12 பிரதேச சபைகளில் 08 உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள், வேலை நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ஒருவர், முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 04 பேர், 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பதில் கடமைகளை ஆற்றியிருந்தனர்.

(உ) வடமேல் மாகாணத்தின் 33 உள்ளூராட்சி நிறுவனங்களது அங்கீகரிக்கப்பட்ட வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளது எண்ணிக்கை 105 ஆகும். எவ்வாறாயினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினரது எண்ணிக்கை 57 ஆகும். 02 உள்ளூராட்சி நிறுவனங்களது 05 அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் வெற்றிடமாக இருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 06 பதவிகளில் 80 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவியது.

(எ) வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில்நுட்பச் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது 06 ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 1,482,397 சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது.

### 6.11.2 பாடசாலைப் பதவியணியினர்

(அ) கிரி உல்ல கல்வி வலயத்தில் உள்ள 08 பாடசாலைகளில் 83 ஆசிரியர்களது பற்றாக்குறை நிலவியது.

(ஆ) மஹவ கல்வி வலயத்தில் தரப்படுத்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் இருக்க வேண்டிய 35 பாடசாலைகளில் குறித்த தரத்திற்கும் குறைவான தரங்களில் உள்ள பாடசாலை அதிபர்களும் 43 பாடசாலைகளில் இருக்க வேண்டிய தரத்திலும் குறைவான தரத்திலான பாடசாலை அதிபர்களும் 65 பாடசாலைகளில் தரப்படுத்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்குப் பதிலாக இலங்கை ஆசிரியர் சேவை ஆசிரியர்களும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

(இ) சிலாபம் கல்வி வலயத்தில் பிரதிப் பாடசாலை அதிபர்களுக்கான 48 வெற்றிடங்களும் 33 உதவி பாடசாலை அதிபர்களுக்கான வெற்றிடங்களும் நிலவின.

(ஈ) சிலாபம் கல்வி வலயத்திலுள்ள 33 பாடசாலைகளில் பாடசாலை அதிபர் பதவிகளில் ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்கள் பதில் கடமையாற்றியவாறிருந்தனர்.

### 6.11.3 சுகாதாரப் பிரிவின் பதவியணி

(அ) வடமேல் மாகாண ஆயர்வேதத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 22 பதவிகளில் 213 வெற்றிடங்களும் 04 பதவிகளில் 28 மேலதிகமும் நிலவின.

(ஆ) பத்து மாகாண ஆயுர்வேத மனைகள், மற்றும் 34 மருந்தகங்கள் என்பனவற்றிற்கு 16 மருந்தாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும், 08 பேர் மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அத்துடன் 22 உதவியாளர் பதவிகளுக்கு ஒருவர் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(இ) மாகாண ஆயர்வேதத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளர் பதவிகள் 09 ஆகும். எவ்வாறாயினும், 27 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் 39 தொழிலாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவின.

(ஈ) மீளாய்வாண்டு முடிவளவில் ஒரே இடத்தில் 10 ஆண்டு காலத்திற்கும் அதிகமாக பணியாற்றிய 380 தாதியர்களை இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மாகாண அரசாங்க சேவையில் இணைத்துக் கொள்ளாது 534 மருந்தாளர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டமையால் குருநாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 46 சுகாதார நிறுவனங்களில் 80 மருத்துவர்கள் அதிகமாக இருந்ததுடன், 35 மருத்துவ மனைகளிலும் சுகாதார நிறுவனங்களிலும் 76 மருத்துவர்களது பற்றாக்குறையும் நிலவியதை இணக்கம் செய்ய முடியாதிருந்தது.

(ஊ) குளியாப்பிட்டிய அடிப்படை மருத்துவ மனையின் அங்கீகரிக்கப்பட்ட 07 பதவிகளில் 97 பேர் மேலதிகமாகவும் 28 பதவிகளில் 168 பேரது பற்றாக்குறையும் நிலவியது.

(எ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்குரிய ஆரம்ப மருத்துவ சிகிச்சைக் கூறு, சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகம், நிறுவனங்கள் மற்றும் 29 மருத்துவ மனைகளில் 74 மருத்துவ உத்தியோகத்தர்கள் மேலதிகமாக இருக்கையில், 11 மருத்துவ மனைகளில் 20 மருத்துவ உத்தியோகத்தர்களது பற்றாக்குறையும் நிலவியது.

**6.12 வாகனப் பயன்பாடு**

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருநாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான பயன்படுத்தப்பட்ட முடியாத 17 வாகனங்கள் துருப்பிடிப்பதற்கு முன்னர் அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு மாகாண தலைமைச் செயலாளருக்கு ஏறக்குறைய ஓராண்டிற்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) குருநாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 13 வாகனங்களது இழப்பு சம்பந்தமாக ரூபா 1,342,892 காப்புறுதி இழப்பீட்டை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) கமத்தொழில், காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதார மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சிற்குச் சொந்தமான வாகனம் ஒன்று 2015 மார்ச் 17 அன்று விபத்துக்குள்ளாகியதால் அதனை பழுதுபார்ப்பதற்கு ரூபா 189,845 செலவாகியது. எனினும், காப்புறுதி இழப்பீடாக மீளளிக்கப்பட்ட தொகை ரூபா 60,302 ஆகும். இதற்கமைய, சாரதியிடமிருந்து ரூபா 129,543 நட்டத்தை அறவிடுவதற்கு விடுவிக்கப்பட்ட கட்டளை அமுலாக்கப்படவில்லை.

(ஈ) பயணங்களில் ஈடுபடுத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ள 48 வாகனங்களினது கைதவிர்ப்பு நடவடிக்கைகள் குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், 03 மாதங்களுக்குள் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**6.13 வங்கிக் கணக்குகள்**

--------------------------------

குருநாகலை கூட்டுறவு உப ஆணையாளர் அலுவலகத்தில் 2000 சனவரி 01 முதல் 2005 சனவரி 31 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 380,583 பெறுமதியான வங்கியிலிடப்படாத பெறுவனவுகள் மீளாய்வாண்டின்போதும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

(அ) மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நோக்கங்களை நிறைவேற்றும் விதம் தொடர்பாகக் கவனம் செலுத்தாது 2016 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இரு விடயங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினது சுற்றறிக்கையின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

### 7.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஒரு அமைச்சு, 03 திணைக்களங்கள் மற்றும் 04 பிரதேச செயலகங்களது மாகாண அரச உத்தியோகத்தர்களது முற்பண நடவடிக்கைகள் சம்பந்தமான செலவினத்தின் அதி கூடிய வரம்பு மீறப்பட்டிருந்தது. அத்தொகை ரூபா 8,598,530 ஆகும். 02 பிரதேச செயலகங்களது பெறுவனவின் அதி குறைந்த வரம்பு ரூபா 12,560 தொகையால் எய்தப்பெறாததுடன் ஒரு அமைச்சினதும் 03 பிரதேச செயலகங்களதும் அதி கூடிய வரவு மீதி வரம்பு ரூபா 1,083,393 அதிகரித்துமிருந்தது.

## 8. முறைமைகளும் கட்டுபாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் மாகாண சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமை | முறைமையிலுள்ள குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) சாத்தியமான வருமான மதீப்பீடு இன்மை |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | பதிவழிக்கப்பட்ட புரள்வு வரி சம்பந்தமாக மாதாந்த அறிக்கைகள் தயாரிக்கப்படாமை |
| | | (iii) | சொத்துக்களது குத்தகை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | சொத்து முகாமைத்துவம் | (i) | நடைமுறை அல்லாத சொத்துக்களைக் கணக்கிலிடாமை |
| | | (ii) | சொத்துக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்படாமை |
| | | (iii) | பயன்படுத்தப்படாத சொத்துக்கள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை |
| | | (iv) | கைதவிர்ப்புச் செய்ய வேண்டிய சொத்துக்களுக்கான நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (இ) | மனிதவள முகாமைத்துவம் | | மேலதிகமாகவும் பற்றாக்குறையாகவும் உள்ள பதவியணி தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (ii) | நியமத்துக்கு அப்பாற்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை |
| (உ) | கொள்வனவுக் கட்டுப்பாடு | (i) | தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களில் தகுதியுடைய அங்கத்தவர்கள் இல்லாமை. |
| | | (ii) | மாகாண சபைக்குச் சாதகமானவாறு கொள்வனவுகளை மேற்கொள்ளாமை. |